2015 மார்ச் 27]

நிறுவனங்களின் மூலம் இயக்கப்பட்டு வருகின்ற அந்த சிற்றுந்து களையெல்லாம் 2014-2015 ஆம் ஆண்டு, பிப்ரவரி வரை 18,360 முறைகள் சோதனை செய்து, 1,407 சிற்றுந்துகள் மீது சோதனை அறிக்கை வழங்கப்பட்டு, அதில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் 116 சிற்றுந்துகள்மீது துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடத்தில் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபொழுது, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, உத்தரவின்படி, கூடுதலாகப் பேருந்துகளை இயக்குவதற்குத் துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

பாலம் கட்டுதல்

***5835—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் பேரூராட்சி, கோடங்கி சின்னாள்பட்டி சாலையில் வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழே*

தன் உயிராய், தமிழகமே தன் உணர்வாய், தமிழக மக்களே தன் உள்ளமாய், தமிழ்நாட்டின் முன்னேற்றமே தனது இலட்சியமாய், உண்ணாது, உறங்காது, உழைப்பைத் தவிர வேறொன்றும் அறியாது, தமிழ்நாட்டைக் காத்து நிற்கும் எங்கள் தங்கத் தலைவி, மக்களின் முதல்வர், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் வணங்கி எனது விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் பேரூராட்சி, கோடங்கி, சின்னாள்பட்டி சாலையில் வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பாலம் அமைக்கும் பணிகள் முடிவடைந்து, அதற்கான அணுகுசாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

திரு. ச. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் பேரூராட்சி, அய்யலூரிலிருந்து கோடங்கி-சின்னாள்பட்டி செல்லும் சாலையில் குறுக்கிடும் வரட்டாற்றில் மழைக்காலங்களில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, பொது மக்களும், பள்ளி மாணவ-மாணவிகளும் பெரும் சிரமப்பட்டு வந்தார்கள். சில நேரங்களில் உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் வரட்டாற்றில் மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன் அடிப்படையில் இக்கேள்வி கேட்கப்பட்டு, அவையில் எடுத்துக்கொள்ளும் முன்பே, தாய் தன் குழந்தைகளின் தேவையைக் குறிப்பறிந்து நிறைவேற்றுவதுபோல், மாண்புமிகு மக்களின் முதல்வர்

2015 மார்ச் 27]

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதலோடு (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறும் இந்த நல்லரசு, மக்களின் தேவையைக் குறிப்பறிந்து, இந்தப் பாலப் பணிக்காக நபார்டு திட்டத்தின்மூலம் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தற்போது பாலப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதோடு, இந்தப் பேரூராட்சியானது மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ளது. இதே பேரூராட்சியில் காக்கையன்பட்டி என்ற ஊருக்குச் செல்லும் வழியில் இரண்டு வரட்டாறுகள் குறுக்கிடுகின்றன. அதில் ஓர் ஆற்றின் குறுக்கே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பாலம் கட்டப்பட்டுவிட்டது. இன்னொரு வரட்டாற்றின் குறுக்கே செல்லும் இந்த ஆற்றுக்குப் பாலம் கட்டப்படாமல் உள்ளது. ஆகவே, காக்கையன்பட்டிக்குச் செல்லக்கூடிய வழியில் இருக்கக்கூடிய அந்த வரட்டாற்றிலும் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே பேரூராட்சிப் பகுதியிலே பாலங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே, 4 வருடங்களில் 64 பேரூராட்சிகளிலே 28 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 72 பாலங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில் 24 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 19 பாலங்கள் கட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. 29 பாலங்கள் கட்டுவதற்கு 29-4-2015 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பாலம், அவசியம் இருப்பின் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அதனைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*